என்பதால் இதை அரசு மீண்டும் ஆய்ந்து அந்த ஆணை இடுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மிளகாய் வற்றல் வியாபாரிகளை நானே அழைத்துப் பேசினேன். வெளி மாநிலங்களிலேயிருந்து மிளகாயை இறக்குமதி செய்து, தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து விற்பதற்கு எப்படிப்பட்ட தடைகளும் கிடையாது. வியாபாரிகளும் அப்படி இருப்பதாக எந்தப் புகாரும் சொல்லவில்லை. எனவே, அதைப்பற்றி இப்போது மறுபரிசீலனை செய்யத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 544, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

544—

பொது விநியோக முறையைச் சீரமைத்தல்.

*4085—திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது விநியோக முறையைச் சீரமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பொது விநியோக முறையைச் சீரமைக்க பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

1. முதலாவதாக, மிக முக்கியமாகத் தேவைப்படும் இடங்களிலே புதிய நியாயவிலைக் கடைகளை நிறுவுதல்.

2. குடும்ப அட்டைதாரர்களுக்கு சென்றடைய வேண்டிய அத்தியாவசியப் பண்டங்கள் அரசு நிர்ணயித்த விலையிலும், சரியான அளவிலும், உரிய நேரத்திலும் சென்றடைகிறதா என்பதைக் கண்காணித்தல்;

1992 ஏப்ரல் 10]

3. பொது விநியோக முறையில் வழங்கப்பட வேண்டிய அத்தியாவசியப் பண்டங்கள் கள்ளச் சந்தைக்குச் செல்லாமல் தடுத்தல், .

4. போலி குடும்ப அட்டைகளை களைதல் போன்ற தீவிரமான நடவடிக்கைகளை இப்போது நாம் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் பொது விநியோக முறையை சீரமைப்பது குறித்து நல்ல நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்து இயம்பினார்கள். நான் கேட்க விரும்புவது, இன்றைக்கு பொது விநியோக முறை என்றால், ரேஷன் கார்டுகளில்தான் பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன. அங்கே எடைகுறைவு இருக்கக் கூடிய நிலையும், போலி கார்டுகள் இருக்கக்கூடிய நிலையும் உள்ளதால் பிளையிங் ஸ்குவாட் போன்ற பறக்கும் படைகளை வைத்து இதுபோன்ற குறைகளைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடை குறைவு இருப்பதை தடுக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருக்கின்றோம். முதலாவதாக, கடைக்கு வரும் பொழுதே, நியாய விலைக் கடைக்கு அந்தச் சரக்கு குறைவாக வருகிறது என்ற புகார் இருந்தது. அதை நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் சொல்லி, அங்கேயிருந்து கொடுக்கின்ற பொருள்களை, ஒழுங்காக 100 கிலோ என்றால், 100 கிலோவுக்குக் குறையாமல் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம். அதேபோல கடைகளுக்கு வந்து இன்ஸ்பெக்ஷன் என்ற பெயரால் 10 பேர், 8 பேர் மாதத்திற்கு வந்து, அவர்களுடைய தொல்லையாலும் அங்கே தவறுகள் நடக்கின்றன என்பதை உணர்ந்து இப்போது குறிப்பிட்டவர்கள் மட்டும்தான் கடைக்குச் சென்று இன்ஸ்பெக்ஷன் செய்ய வேண்டும்; மேற்பார்வையிட வேண்டும் என்ற உத்தரவை போட்டு இருக்கிறோம். இதற்கு முன்னாலே சேல்ஸ்மேன் மட்டும் பொறுப்பாய் இருந்ததை மாற்றி, இன்றைக்கு அந்த நியாய விலைக் கடைகளை நடத்துகின்ற கூட்டுறவுச் சங்கத்தினுடைய தனி அலுவலர், செயலாளர், சேல்ஸ்மேன், கேஷியர் ஆகிய அந்த சொசைட்டிக்குச் சம்பந்தப்பட்ட அனைவருமே பொறுப்பு ஏற்க வேண்டும் என்று ஆணையிட்டு இருக்கிறோம். இதற்கு முன்னாலே, தவறு செய்தவர்களை மீண்டும் திரும்ப வேலைக்கு வைத்துக் கொள்வது, இனி நடக்காது. அவர்கள் ஒரு முறை வேண்டுமானால் மன்னிக்கப்படு

வார்கள். இரண்டாவது முறையும் தவறு செய்தால், வேலையை விட்டு நீக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, எடை குறைவு இல்லாமல் பார்த்துக் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ, சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இந்த ரேஷன் கார்டுகளைப் பெறுவதற்கு மாத வருமானம் 300 ரூபாய் என்ற நிலை இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய பண வீக்கத்தின் காரணமாக, பணத்தினுடைய மதிப்பு குறைந்து விட்ட நிலையில் சாதாரண கூலி விவசாயி கூட மாத வருமானம் 300 ரூபாய்க்கு மேலே பெறக்கூடிய நிலையினால், அந்த இன்கம் சீலிங்கே ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. எனவே, இதை மாற்றி இந்த மாத வருமானத்தினுடைய தொகையை உயர்த்தி, ரேஷன் கார்டுகளை அதிக அளவில் விநியோகம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு மாத வருமானம் என்று எதுவுமே கிடையாது. இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் மட்டும்தான் எல்லோருக்கும் குடும்ப அட்டைகளை இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு அளித்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) $1\frac{1}{4}$ கோடி குடும்ப கார்டுகள், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தாராளமாகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட இன்கம் சீலிங் எதுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக முறை சீரமைப்பின்படி, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த புவனகிரி தொகுதியில் உள்ள புதுக்குப்பத்தில் நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

1992 ஏப்ரல் 10]

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமானம் அதிகம் உள்ளவர்களுக்கு, அரிசி, குடும்பக் கார்டில் இருந்து நீக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற விவாதத்திலே கூட இப்படிப்பட்ட கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் அவற்றைப் பரிசீலனை செய்து முடிவு எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 545, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

545—

கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்தல்.

* 4493—திரு. செ. து. வரதராஜன்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலியை அரசு நிர்ணயம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கரும்பு வெட்டும் தொழிலுக்கு தனியாக குறைந்த பட்ச ஊதியம் ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால் விவசாயத்திற்கும் அதனைச் சார்ந்த தொழில்களுக்கும் 2—4—1989 ஆம் நாளிட்ட அரசாணை எண் 633ல் குறைந்த பட்ச அளவு ஊதியத்தை அரசு நிர்ணயம் செய்துள்ளது. அதில் நெல்லைத் தவிர ஏனைய பயிர்களை அறுவடை செய்ய நாளொன்றுக்கு ரூ. 16 குறைந்த பட்ச ஊதியமாக வழங்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி